இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 353 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 17 – புதன்கிழமை 02 ஆகஸ்ட் 2023 – சென்னை 20 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 81 - Issue 353: Thiruvalluvar Year - 2054 - Aadi 17 - Wednesday 02 August 2023 - Chennai 20 Pages ₹ 5.00

### தமிழ்நாட்டிற்கும், தமிழினத்திற்கும் பெரும் பங்காற்றிவரும் திராவிடர் கழகத் தலைவர்

# முனைவர் கி.வீரமணிக்கு “தகைசால் தமிழர்” விருது!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.8.2023) தலைமைச் செயலகத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள் “தகைசால் தமிழர்” விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக சந்தித்த போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திராவிடர் கழகத் தலைவர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் பொருளாளர் வீ. குமரேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

**சென்னை, ஆக. 2 -**

**‘தகைசால் தமிழர்’ விருதிற்கு திராவிடர் கழகத் தலைவர் முனைவர். கி.வீரமணி அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விருதை வழங்குகிறார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது :-

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் “தகைசால் தமிழர்” என்ற பெயரில் புதிய விருது 2021 ஆம் ஆண்டு முதல் தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான விருதாளரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, ‘சமூகப் பாகுபாட்டுக்கு ஆளான மக்களுக்கு’ ஆதரவாக தந்தை பெரியார் நடத்திய சமூகப் பிரச்சாரங்கள் மற்றும் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு நாற்பது முறை சிறைவாசம் அனுபவித்தவரும், 1962 இல் விடுதலை நாளிதழ் ஆசிரியராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 60 ஆண்டுகளையும் கடந்து மிகச் சிறப்பாக பணி செய்து வருபவரும், உண்மை, பெரியார் பிஞ்சு, The Modern Rationalist (ஆங்கிலம்) இதழ்களுக்கு ஆசிரியராகவும், இணைய தளங்கள் வாயிலாகவும் மேற்கண்ட கருத்துக்களைப் பரப்பி பன்னாட்டுத் தமிழர்களையும் ஒருங்கிணைத்து பெரியாரின் பணியைத் தொடர்ந்து வருபவரும், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகிற தமிழரும், திராவிடர் கழகத் தலைவருமான முனைவர். கி.வீரமணி அவர்களுக்கு 2023ஆம் ஆண்டிற்கான ‘தகைசால் தமிழர் விருது’ வழங்க தேர்வுக் குழுவினரால் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

**ரூ. 10 லட்சம் பாராட்டுச் சான்றிதழ்!**

‘தகைசால் தமிழர்’ விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முனைவர். கி. வீரமணி அவர்களுக்கு, பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும், வருகிற 2023 ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

### நிவாரண முகாம்களில் தங்கியுள்ள

# மணிப்பூர் மக்களுக்கு ரூ.10 கோடியில் பொருட்கள்!

## ஒப்புதல் வழங்கிடக்கோரி முதல்வர் மு.க.ஸ்டாலின் மணிப்பூர் முதல்வருக்குக் கடிதம்!

**சென்னை, ஆக. 2 -**

**மணிப்பூரில் தற்போது நிலவி வரும் சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிடும் பொருட்டு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்திட ஒப்புதல் வழங்கிடக் கோரி மணிப்பூர் மாநில முதலமைச்சர் என்.பைரேன் சிங் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

மணிப்பூரில் தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிடும் வகையில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்திட ஒப்புதல் வழங்கிடக் கோரி மணிப்பூர் மாநில முதலமைச்சர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், மணிப்பூரில் உள்ள தமிழர்களுக்கு அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் தொடர்ந்து பாதுகாப்பு அளிக்குமாறு தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நிவாரணப் பொருட்கள்!**

தற்போதைய சூழ்நிலையின் காரணமாக 50,000க்கும் மேற்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில அத்தியாவசியப் பொருட்களின் தேவை அதிகரித்து வருவதாகவும் தனது கவனத்திற்கு வந்ததாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த இக்கட்டான நேரத்தில், சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பிலான தார்பாலின் விரிப்புகள், படுக்கை விரிப்புகள், கொசுவலைகள், அத்தியாவசிய மருந்துகள், சானிட்டரி நாப்கின்கள் மற்றும் பால் பவுடர் போன்ற தேவையான நிவாரணப் பொருட்களை வழங்குவதன் மூலம் மணிப்பூர் மாநிலத்திற்கு உதவிகளை வழங்கிடத் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**ஒப்புதல் வழங்கிடுக!**

இந்த பொருட்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் தேவைப்பட்டால் அவற்றை விமானம் மூலம் அனுப்பி வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த மனிதாபிமான உதவிக்கு மணிப்பூர் மாநில அரசின் ஒப்புதலை வழங்குமாறு தாம் கேட்டுக்கொள்வதாகவும், மேலும், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தெரியப்படுத்தவும் கோரியுள்ளார், இதன் மூலம் தமிழ்நாடு அரசின் அதிகாரிகள் மணிப்பூர் மாநில அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு நிவாரணப் பொருட்களை விரைவாக அனுப்ப இயலும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

### ஆர்.எஸ்.எஸ். சார்பில் மத ஊர்வலம்!

# பா.ஜ.க. ஆளும் அரியானாவில் பயங்கரக் கலவரம்!

## வன்முறை! துப்பாக்கிச் சூடு! 2 பேர் பலி!

குருகிராம், ஆக. 2 –

அரியானாவில் மத ஊர்வலத்தில் பயங்கர வன்முறை மூண்டது. இதில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஊர்க்காவல் படை வீரர்கள் 2 பேர் உயிரிழந்தனர். அரியானா மாநில விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு சார்பில் மத ஊர்வலம் ஒன்று நடந்தது. குருகிராம் மாவட்டத்தில் தொடங்கிய இந்த ஊர்வலம் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நூ மாவட்டத்திலும் தொடர்ந்தது.

ஆனால் இந்த மாவட்டத்தின் கேட்லா மோட் பகுதியில் ஊர்வலம் சென்றபோது மற்றொரு பிரிவைச் சேர்ந்த சில இளைஞர்கள் தடுத்து நிறுத்தினர். பின்னர் ஊர்வலம் சென்றவர்கள் மீது கல்வீசி தாக்கியதாக தெரிகிறது.

இதைத்தொடர்ந்து இரு தரப்பினருக்கு இடையே பயங்கர வன்முறை வெடித்தது. இரு தரப்பும் கற்களை வீசி தாக்கினர். இதில் போலீசார் உள்பட பலர் காயமடைந்தனர்.

**2 பேர் பலி! போலீசார் காயம்!**

இந்த வன்முறையில் இருந்து தப்புவதற்காக ஏராளமானோர் அருகில் உள்ள கோவில் ஒன்றில் தஞ்சம் அடைந்தனர். பின்னர் அவர்களை போலீசார் பத்திரமாக மீட்டனர்.

மறுபுறம் வன்முறையாளர்கள் போலீசாரின் வாகனங்கள் உள்பட பல வாகனங்களுக்கு தீ வைத்தனர். அத்துடன் துப்பாக்கிகளாலும் சரமாரியாக சுட்டுக்கொண்டனர்.



இதில் ஊர்க்காவல் படை வீரர்கள் 2 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். போலீஸ் டி.எஸ்.பி. உள்பட 12 போலீசார் காயமடைந்தனர். இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கலவரம் கட்டுக்கடங்காமல் சென்றதை தொடர்ந்து போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி வன்முறையாளர்களை கலைத்தனர்.

இந்த வன்முறையை தொடர்ந்து அந்த மாவட்டம் முழுவதும் பெரும் பரபரப்பும், பதற்றமும் நிலவி வருகிறது. எனவே மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. மேலும் வதந்தி பரவாமல் தடுப்பதற்காக மாவட்டத்தில் இன்று வரை இணையதள முடக்கம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

இதற்கிடையே நூ மாவட்டத்தில் வன்முறை அரங்கேறிய தகவல் அறிந்ததும் அண்டை மாவட்டமான குருகிராமின் சோனாவில் வன்முறை பரவியது. அங்கும் 4 வாகனங்கள் மற்றும் ஒரு கடை தீக்கிரையாக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த கலவரத்தை தொடர்ந்து நூ மாவட்டத்துக்கு கூடுதல் போலீசார் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. இதனால் மாவட்டம் முழுவதும் பதற்றம் நிலவி வருகிறது.

---

### டெல்லியில்

## காய்கறி சந்தையில் ராகுல்காந்தி திடீர் ஆய்வு!

*புதுடெல்லி, ஆக. 2 -*

*டெல்லி ஆசாத்பூர் சந்தைக்குச் சென்ற ராகுல் காந்தி அங்கு காய்கறி வியாபாரிகளிடம் உரையாடினார். இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலானது. ராகுல் காந்தி தனது சமூக வலைதள பக்கத்தில் கடந்த மாதம் 29ந் தேதி டெல்லி ஆசாத்பூர் சந்தையில் கண்ணீர் மல்க பேசிய காய்கறி வியாபாரி ஒருவரின் வீடியோவை பகிர்ந்தார்.*

*அதில் ராமேஷ்வர் என்ற காய்கறி வியாபாரி, “தக்காளி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. என்னால் தக்காளி வாங்கி விற்பனை செய்ய இயலவில்லை. அப்படியே வாங்கினாலும் அதை என்ன விலையில் விற்பது என்பதும் தெரியவில்லை. சிலர் தக்காளிகளை இருப்பு வைத்துள்ளனர். மழையில் அது அழுகிப்போக வாய்ப்பு உள்ளது. அதனாலும் நஷ்டம் ஏற்படும். பணவீக்கம் உயர்வால் என் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளது. ஒருநாளைக்கு ரூ.200 சம்பாதிப்பதே கடினமாக இருக்கிறது” என்று பேசியது பதிவாகி இருந்தது.*

*இந்நிலையில் அவர் மீண்டும் மக்களுடன் நெருங்கி பழகி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து வருகிறார். அதனை தொடர்ந்து ராகுல் காந்தி டெல்லியில் உள்ள ஆசாத்பூர் சந்தைக்கு நேரில் சென்றார்.*

*அங்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகளுடன் ராகுல் காந்தி கலந்துரையாடினார். பின்னர் காய்கறி விலை, விலைவாசி நிலவரம் குறித்து தெரிந்து கொண்டார். இதுகுறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.*